**செய்தி வெளியீட்டு எண்.401** **நாள்:22.7.2009**

**<u>மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆணைக்கேற்ப மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கோ.சி.மணி அவர்கள் தலைமையில் கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம்</u>**

இன்று (22.7.2009) தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆணைக்கேற்ப மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கோ.சி மணி அவர்கள் தலைமையில் 2009–10 ஆம் ஆண்டின் மானியக் கோரிக்கை அறிவிப்புகள் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள், பயிர்க்கடன் வழங்கல், உர விநியோகம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் அனைத்தையும் தன்னிறைவடையச் செய்தல்; தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளை மேம்படுத்தல். கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைகளை மேம்படுத்தல், கூட்டுறவுக் கடன் சங்கங்களின் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குதல் குறித்தான கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறைச் செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. யத்தீந்திர நாத் ஸ்வேன், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் திரு.கா.பாலச்சந்திரன்,இ.ஆ.ப., திரு.எல்.சித்திரசேனன், திரு.க.மா.தமிழரசன், திரு. இரா.ராஜேந்திரன், திரு.ப்பி.பாண்டியன், திரு.கே.பாலசுப்பரமணியன் மற்றும் கூட்டுறவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**